உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.583/2023

பெயர் : பாலகிருஷ்ணன்(அ.சா.8.)

தகப்பனார் பெயர் :செளந்தர்ராஜன்

கணவர் பெயர் :

வயது :55

கிராமம் :கொட்டாம்பட்டி

வட்டம் :மேலூர்

தொழில் :சார்பு ஆய்வாளர் கொட்டாம்பட்டி காவல்நிலையம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

24.01.2025

முதல் விசாரணை:

நான் மதுரை மாவட்டம், கீழவளவு காவல்நிலையத்தில் கடந்த 20.12.2021 அன்று காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, மருத்துவமனையில் இருந்து எனக்கு கிடைத்த தகவலின் பேரில் நான் மேலூர், அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த நதியா W/oமுனிஸ்வரன் என்பவரிடம் விசாரணை செய்து அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று, மதியம் சுமார் 2.00 மணியளவில் மேலூர் காவல்நிலையம் வந்து, கீழவளவு காவல்நிலைய குற்ற எண்.355/2021 முதல் தகவல் அறிக்கையை பூமாதேவி என்ற பூமி மற்றும் தங்கையா என்ற அருணாச்சலம் ஆகியோர் மீது பிரிவு 294(பி), 307, 506(2) இ.தச.பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான கீழவளவு காவல்ஆய்வாளர், தனிஅலுவலாக வெளியில்

இருந்ததால் அவருடைய உத்தரவின் படி, கீழவளவு சார்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகிய நான் இவ்வழக்கினை பதிவு செய்து, எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, மதியம் 3.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அழகர்சாமி, மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.6. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் பார்வைமகஜரில் மேற்படி அழகர்சாமி மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்திட்டுள்ளனர். பின்னர் சாட்சிகள் 1 முதல் 9 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து, 161(3) கு.வி.மு.ச படி வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை தேடிவந்த நிலையில், எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் வரவழைக்கப்பட்ட, மேலூர் காவல்நிலைய பெண்முதல்நிலைகாவலர் 944, திருமதி.பாண்டிச்செல்வி என்பவரது உதவியுடன் மாலை 6.00 மணிக்கு அட்டப்பட்டி பேருந்துநிலையம் அருகில் இருந்த இவ்வழக்கின் ஆஜர் எதிரிகள் பூமி என்ற பூமாதேவி, தங்கையா என்ற அருணாச்சலம் ஆகியோரை காரணம் கூறி கைது செய்து மாலை 6.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து பூமாதேவியை மேற்படி பெண்முதல்நிலைகாவலர் மூலம் திரேக பரிசோதனை செய்தும் அருணாச்சலம் என்பவரை திரேக பரிசோதனை செய்தும் பாராவசம் ஒப்படைத்தேன். பின்னர் எதிரிகளின் கைது பற்றிய விபரத்தை அவர்களின் உறவினர்களிடம் தெரிவித்து உச்சநீதிமன்ற கட்டளைகளை கடைபிடித்து, எதிரிகளை தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

அ.சா.1 நதியா மேலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த போது நான் விசாரணை செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அவர் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தார் என்பதற்கு இல்லை என்றால் இல்லை. மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நதியாவை விசாரித்துவிட்டு இதுதொடர்பாக என்ன நடந்தது என்பது பற்றியோ, காயங்கள் பற்றியோ மேலூர் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் இருந்து எனக்கு தகவல் கிடைத்தது என்பது பற்றி ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேலூர் அரசு மருத்துவமனைக்கு சம்பவம் நடந்து அன்று மதியம் 12.50ல் இருந்து 1.00 மணியளவில் வந்துவிட்டேன். அ.சா.1 நதியா சிகிச்சையில் இருந்தபோது நான் நேரடியாக அவரை பார்த்தேன். அ.சா.1 நதியா அப்போது என்ன நிலையில் இருந்தார் என்றால் வலியால் துடித்துகொண்டிருந்தார். அவர் முதுகில் முழுவதுமாக தீக்காயங்கள் இருந்தது. சிகிச்சையில் இருந்த போது நதியாவால் பேசமுடியவில்லை என்றால் சரியல்ல, அவர் என்னிடம் பேசினார். நான் மதியம் 12.50 மணியளவில் மேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று மதியம் 1.15 மணிக்கு கிளம்பிவிட்டேன். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை நான் எழுதினேன், அ.சா.1 அதை படித்து பார்த்து கையெழுத்து செய்தார். அ.சா.1 நதியா பி.காம் பட்டதாரி என்றால் தெரியவில்லை. அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கையில் புகார் வாக்குமூலம் கொடுத்த நதியாவிடம் கையெழுத்து பெறப்பட்டதா என்றால் இல்லை. நதியா என்னிடம் விசாரணையின் போது, எந்த இடத்தில், எந்த தேதியில், என்ன நடந்தது என்ற விபரத்தை வாக்குமூலமாக கொடுத்தார் என்றால் சரிதான். நதியாவிடம் புகார் வாக்குமூலம் பெற்றவுடன் சம்பவம் நடந்தது உண்மைதானா

என்று வேறு நபர்களிடம் நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை, முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தவுடன் விசாரணை செய்தேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் சம்பவ இடத்திற்கு சென்று மதியம் சுமார் 3.00 மணியளவில் சாட்சிகளிடம் விசாரணை நடத்தினேன். ஒவ்வொரு நபரையும் சுமார் 10 நிமிடம் அளவில் விசாரணை செய்துள்ளேன். சம்பவ இட கண்ணுற்ற சாட்சிகளான சதிஷ்கோபி, சேவுகபெருமாள், பாலமுருகன், ஆகியோருக்கு சம்பவ இடத்திற்கு அருகில் வீடு இல்லை என்றால் சரியல்ல, வீடு இருக்கிறது. நான் தாக்கல் செய்திருக்கும் மாதிரிவரைபடமான அ.சா.ஆ.7 ஆவணத்தின் அடிப்படையில் கண்ணுற்ற சாட்சிகளுக்கு சம்பவ இடத்திற்கு அருகே வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அவர்கள் அதே ஊரைச்சார்ந்தவர்கள் தான். பார்வை மகஜர் சாட்சிகளான அழகர்சாமி, மற்றும் கிருஷ்ணன் ஆகியோருக்கும் சம்பவ இடத்திற்கு அருகே வீடு இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கு வீடு ஊரின் ஆரம்பத்தில் இருக்கிறது, ஒரே ஊர் தான். அ.சா5 சதிஷ்குமாரும், அ.சா6. பஞ்சவர்ணமும், சம்பவம் நடந்த இடமான பூதமங்கலத்தை சார்ந்தவர்கள் அல்ல என்றும், அவர்கள் கோட்டநத்தம்பட்டியை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். மேற்படி அ.சா.5 மற்றும் அ.சா.6 இருவருமே அ.சா.1 நதியாவின் மைத்துனர் மற்றும் மாமியார் என்றால் சரிதான். சம்பவ இடத்தை ஆய்வு செய்ததன் அடிப்படையில் அங்கு இருந்து எண்ணெய் சட்டியையோ, எண்ணெயையோ, அல்லது எண்ணெய் ஊற்றப்பட்ட உடைகளையோ நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமலேயே காவல்நிலையத்தில் வைத்து சாட்சிகளை உற்பத்தி செய்து முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 நதியா மற்றும் ஆஜர் எதிரிகளின் குடும்பத்திற்கு சொத்து தொடர்பான முன்விரோதம் இருந்து வந்தது என்ற அடிப்படையில் விசாரணை நான்

நடத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.1 நதியா W/oமுனிஸ்வரன் வாக்குமூலத்தின் அடிப்படையில்அவருடைய முழுவிலாசம், 3/64, அண்ணாநகர், கோட்டநத்தம்பட்டி என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை அட்டப்பட்டி பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளது தவறு என்றும், அவ்வாறு சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் ஆஜர் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. திருமதி.பாண்டிசெல்வி பெண்காவலர் உதவியுடன் பூமி என்ற பூமாதேவியை கைது செய்ததாக குறிப்பிட்டதை நிருபிக்க அவரை சாட்சி பட்டியலில் சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கில் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளோம். நான் தவறாக சொல்கிறேன் என்றம், நாங்கள் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் எந்த இடத்திலும் ஒப்புதல் வாக்குமூலமானது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றிருந்தால் அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்ற விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் மதுரையில் உள்ள கென்னட் மருத்துவமனையில் உள்ள மருத்துவரை நான் விசாரிக்கவில்லை காவல்ஆய்வாளர் சார்லஸ் அவர்கள் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள். சம்பவம் நடந்த அன்றே மருத்துவர் கென்னட் மருத்துவமனை அவர்களை ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தாரா என்றால் அது தெரியவில்லை. என்னை சம்பவம் நடந்த அன்றே ஆய்வாளர் விசாரணை செய்தாரா என்றால் ஆம் என்று சாட்சி சொல்லிவிட்டு மீண்டு மமறுத்து இல்லை என்று குறிப்பிடுகிறார். சம்பவம் நடந்த அன்று ஆய்வாளர் திரு.சார்லஸ் அவர்கள் வெளிவேலையாக வெளியூர் சென்றதாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி தாமாக முன்வந்து காவல்ஆய்வாளர் திரு.சார்லஸ் அவர்கள் 19.01.2022 அன்று

என்னை காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார். நான் சொல்லியது போல, சொல்லிய இடத்தில், சம்பவம் சொன்ன நேரத்தில், சொல்லிய விதத்தில் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அரசு தரப்பு சான்றாவணங்கள் அனைத்துமே பின்யோசனையுடன் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும்,நான் கூறியது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், நான் புகார்தாரருக்கு ஆதரவாக வழக்கு ஆஜர் எதிரிகள் மீது பதிவு செய்துள்ளேன் என்றும் சரியாக சாட்சிகளை விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.01.24 18:51:34 +0530

Assistant Sessions Judge

Melur